# கோறளைப்பற்று பிரதேச சபை

## 55வது சபை அமர்வு (01.09.2022)

## கூட்டறிக்கை

**காலம்:** 01.09.2022 – வியாழக் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 55ஆவது சபை அமர்வு, 01.09.2022 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

| | | |
|---|---|---|
| 01. | திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | ~ கௌரவ தவிசாளர் |
| 02. | திரு. தர்மலிங்கம் யசோதரன் | ~ கௌரவ உப தவிசாளர் |
| 03. | ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 04. | திரு. சிற்றம்பலம் கிருபாகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 05. | திரு. காளிக்குட்டி நடராசா | ~ கௌரவ உறுப்பினர் |
| 06. | ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் | ~ கௌரவ உறுப்பினர் |
| 07. | ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ~ கௌரவ உறுப்பினர் |
| 08. | திரு. கனகரெட்ணம் கமலநேசன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 09. | திரு. பொன்னையா புஸ்பேந்திரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 10. | திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் | ~ கௌரவ உறுப்பினர |
| 11. | ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 12. | திரு. கதிரவேலு நல்லரெட்ணம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 13. | திரு. குணராசா குணசேகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 14. | திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 15. | திரு. சாமித்தம்பி மணிசேகர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 16. | திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் | ~ கௌரவ உறுப்பினர |
| 17. | திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ~ கௌரவ உறுப்பினர் |
| 18. | திருமதி. பொன்னையா கலைவாணி | ~ கௌரவ உறுப்பினர் |
| 19. | ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | ~ கௌரவ உறுப்பினர் |
| 20. | ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 21. | திரு. சண்முகம் கதிரவன் | ~ கௌரவ உறுப்பினர் |

55ஆவது சபை அமர்வானது கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில் சபா மண்டபத்தில் 01.09.2022 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பமானது

அதனைத்தொடர்ந்து 55 ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளார், கௌரவ உறுப்பினர்கள், மற்றும் செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

எமது சபை நடவடிக்கை வழமைபோன்று இடம்பெற்று வந்தாலும் வாகனங்களுக்கான எரிபொருள் பற்றாக்குறை காணப்படுவதாகவும், எனினும் வாழைச்சேனை MPCS எரிபொருள் நிரப்பு நிலையம் ,போக்குவரத்து சபைக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் வழமையாக எமது சபைக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் சோமநாதன் அவர்களின் எரிபொருள் நிலையம் போன்ற எரிபொருள் நிலையங்களில் எரிபொருளினை பெற்றுக்கொள்வதாகவும், இருந்தபோதும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வழமை போன்று வாகனங்களை இயக்க முடியவில்லை எனவும், தற்பொழுது 03 உழவு இயந்திரங்கள் எரிபொருள் தட்டுப்பாட்டினால் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை எனவும் இன்று மதியமளவில் எரிபொருளினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் தெரிவித்ததுடன்,

கௌரவ உறுப்பினர்களான திரு. கந்தசாமி பகீரதன் மற்றும் திரு. சுந்தரம் சுதர்சன் ஆகியோர் விடுமுறை கோரியிருப்பதாகவும் அதனையும் அங்கிகரித்துத்தருமாறு கேட்டுக் கொண்டுடதுடன்,

கௌரவ உறுப்பினர்கள் அனைவரினாலும் வீதி விளக்குகளை கோரிய மனுக்கள் கிடைக்கெப்பெற்றிருப்பதாகவும் வீதி விளக்கினை பெற்று கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததாகவும் அதற்கான வீதி விளக்குகளும் கொள்வனவு செய்யப்பட்டதனால மாற்றீடாக வேறு தலைப்பிலிருந்துதான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது எனவும் தாற்பொழுது ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறை காரணமாக மேற்படி திட்டத்திற்கு நிதிஒதுக்கீடு செய்யமுடியாமல் உள்ளதாக சுட்டிக்காட்டியதுடன்,

மின்விளக்குகள் பழுதடைந்த விடயங்களுக்காகவும் புதிதாக மின் விளக்குகள் கோரிய கடிதங்கள் கிடைக்கப்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் மின்குமிழ் கொள்வனவு செய்வதா? இல்லையா? என்பது தொடர்பாக ஆரயவேண்டியுள்ளதாகவும் தெரிவித்ததுடன்,

எமது சபைக்குட்பட்ட 3 பிரதேச செயலகப் பிரிவுகளில் மலக் கழிவுகளை அகற்றும் களி வவுசருக்கான கட்டணமாக வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடிப் பிரதேசங்களில் கழிவகற்றுவதற்கு 5000.00 ரூபாயும் பாசிக்குடா சுற்றுலா விடுதிகளுக்கு கழிவகற்றுவதற்கு 1000.00ரூபாயும் கிழக்குப் பல்கழைக்கழகத்திற்கு கழிவகற்றுவதற்கு 1000.00ரூபாயும் மற்றும் சந்திவெளி, கிரான் பிரதேசங்களுக்கு கழிவகற்றுவதற்கு 7000.00ரூபாயும் அறவீடு செய்யப்படுவதாகவும் தற்பொழுது எரிபொருள் விலையோற்றம் காரணமாக ஒரு தடைவ கழிவுகளை அகற்றி விட்டுவருவதற்கான செலவு (எரிபொருள் செலவு மட்டும்) 11000.00 ரூபாய் செலவாகுவதாகவும் இது தொடர்பாக கண்டணத்தினை அதிகரித்துத்தருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு இவ் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் கடிதம் மூலம் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்ததுடன், மேற்படி கட்டணத்தினை அதிகரிப்புச் செய்வதற்கான முடிவுகளை எடுத்துத்தருமாறு கௌரவ உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டதுடன்,

சந்திவெளி திகிலிவெட்டை படகுப்பதைக்கான 20லீற்றர் மண்ணெண்ணையினை பெற்றுக்கொடுத்த கௌரவ உறுப்பினர்களான திரு. கதிரவேலு நல்லரெட்ணம் மற்றும் திரு. கனகரெட்ணம் கமலநேசன் ஆகியோருக்கு சபையின் சார்பாகவும், கௌரவ உறுப்பினர்கள் சார்பாகவும் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதாகவும் ,

அத்துடன் தற்பொழுது சந்திவெளி திகிலிவெட்டை படகுச் சேவைக்கான தேவையான எரிபொருளினை மொத்தமாகப் பெற்றுக் கொண்டு களஞ்சியப்படுத்தி, தேவைக்கேற்ப வழங்கி வருவதாகவும் கூறிக்கொண்டு கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை உறுதிப்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டு தனது தலமையுரையினை நிறைவுசெய்தார் .

காலை 9.15 மணியளவில் கௌரவ உறுப்பினரான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் அவர்கள் கௌரவ தவிசாளார் அவர்களின் அனுமதியினைப் பெற்று சபை நடவடிக்கையிலிருந்து வெளியேறினார்.

**அதனைத் தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களான** திரு. கந்தசாமி பகீரதன் மற்றும் திரு. சுந்தரம் சுதர்சன் ஆகியோர் சுகயீன விடுமுறை அறிவித்துள்ளதாகவும் அதனை அங்கிகரித்துத் தருமாறு கௌரவ தவிசாளர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கமைவாக கௌரவ உறுப்பினர்களது விடுமுறை அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள்** சந்திவெளி திகிலிவெட்டை படகுச்சேவை தொடர்பாக கயிறு மூலம் பாதை இயக்கப்படுவதனை தடைசெய்யவேண்டும் என தான் உரையாற்றியதாக கடந்த மாதக் கூட்டக்குறிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் .அது அவ்வாறு அல்ல எனவும், தற்பொழுதுள்ள சூழ்நிலையில் அத்தியவசியப் பொருட்களை கொண்டு செல்லவேண்டியுள்ளதனால் கயிறு மூலம் பயணிக்கத்தான் வேண்டும் எனவும், இருந்தும் அவசர நிலையின் போது பெற்றோல் ஆவது கொடுத்து உதவ வேண்டும் என கேட்டுக் கொண்டதாக தனது கருத்தினைப் பதிவு செய்தார்

**அதனைத்தொடந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள்** கௌரவ தவிசாளர் அவர்கள் தலமையுரையில் குறிப்பிட்டிருந்த களிவகற்றும் விடயத்தினை நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருக்கலாம் எனவும் அத்துடன் 2023ஆம் ஆண்டிற்கான(கடிதம் மூலம் அனுப்பப்பட்ட) வரவு செலவுத்திட்டத்திற்கான முன்மொழிவு தொடர்பாகவும் தலமையுரையில் குறிப்பிட்டிருக்கலாம் எனவும் , ஒரு விடயத்தினை நாங்கள் ஆதரித்தால் எங்களது பெயரை கடைசியாகக் குறிப்பிடுவதாகவும் 2022ஆம் ஆண்டிற்கான வரவு செவுத்திட்டத்திற்கான முன்மொழிவினை 09.11.2021ஆம் ஆண்டு எழுத்துமூலம் சமர்ப்பித்திருந்ததாகவும், இருந்ததேபாதும் அதனை செயற்படுத்த தவிறயதாக சுட்டிக்காட்டியதுடன், முன்னாள் செயலாளரினால் முறாவடைதமிழ் கிராமத்திற்கும் கறுவாக்கோணி கிராமத்திற்கும் இரண்டு அபிவிருத்தி வேலைகள் போடப்பட்டிருந்ததாகவும் ஆனால் அவ் அபிவிருத்தித்திட்டம் செயற்படுத்தாமல் விடப்பட்டதாகவும் தெரிவித்ததுடன் தவிசாளர் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் தொலைபேசி அழைப்பிற்கு பதிலளிப்பதில்லை எனவும், கட்சி ரீதியாக மாற்று கட்சியினர் என்பதனால் அபிவிருத்தி செய்யக் கூடாது என்பது இங்கு எழுதாத சட்டமாக காணப்படுவதாகவும் தெரிவித்ததுடன் இம்முறை வரவு செலவுத்திட்டத்திற்கான முன்மொழிவொன்றினை வழங்கியிருப்பதாக தனது கருத்தினை பதிவு செய்தார் .

**அதற்குப் பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** கௌரவ உறுப்பினர் குறிப்பிடுவதைப் போன்று கட்சி ரீதியாக எந்த விடயமும் நடத்தவில்லை எனவும், தொலைபேசி அழைப்பு வரும் பொழுது கூட்டங்களில் கலந்து கொண்டு இருப்பதனால் தொலைபேசி அழைப்புக்குப் பதில் வழங்க முடிவதில்லை எனவும் , அத்துடன் பயிற்சி நெறிகளில் கலந்து கொள்வதனால் பயிற்சி நெறி முடியும் வரை தொலைபேசி பயன்படுத்த முடியாது எனவும் வேறு நேரங்களில் தொலைபேசி அழைப்புக்குப் பதில் வழங்காமல் இருந்ததில்லை என்பதனை சுட்டிக்காட்டியதுடன் கௌரவ உறுப்பினரது பெயரினை எழுதும் பொழுது அதன் வரிசைக்கேற்ப எழுதப்படுவதாகவும், குறிப்பிட்ட இடத்தில் தான் எழுதவேண்டும் என்று எந்த வொரு

சட்டமும் இல்லை எனவும் அவ்வாறு தாங்கள் செய்யப்படுவதில்லை என்பதுடன் அவ்வாறு நாங்கள் பார்ப்பதில்லை எனவும் பதிலளித்தார்.

**அதனைத் தொடர்ந்து** கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை கௌரவ உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்வதாக கௌரவ உறுப்பினர் திரு. சாமித்தம்பி மணிசேகர் அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உறுப்பினர் திரு. சண்முகம் கதிரவன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன், கூட்டக்குறிப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவாக வாக்கெடுப்பு இடம்பெறும்போது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன் , ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் , திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி , திரு. சண்முகம் கதிரவன் அகிய 12 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன், எதிராக திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. குணராசா குணசேகரன், திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர், ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, காமீது லெவ்வை இப்றாஹீம், ஆகிய 06 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் , ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் , திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன், ஆகியோர் நடுநிலை வகித்தனால் கடந்தமாதக் கூட்டக்குறிப்பானது 06 மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதுடன் கௌரவ உறுப்பினரான ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், அவர்கள் வாக்கெடுப்பு நடைபெறும்போது அவையில் பிரசன்னமாகியிருக்கவில்லை

**திருத்தம் 01** கடந்தமாத கூட்டத்தொடரில்(54வது) திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் சந்திவெளி திகிலிவெட்டை படகுச்சேவை கயிறு மூலம்தான் நடைபெறுகின்றது எனவும் அப் பயணத்தினை தடைசெய்யவேண்டும் என 4ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வசனமானது தற்பொழுதுள்ள சூழ்நிலையில் அத்தியவசியப் பொருட்களை கொண்டு செல்லவேண்டியுள்ளதனால் கயிறு மூலம் பயணிக்கத்தான் வேண்டும் எனவும் இருந்தும் அவசர நிலையின் போது பெற்றோல் ஆவது கொடுத்து உதவ வேண்டும் என மாற்றம் செய்யப்படுகின்றது

### கணக்கறிக்கை சமர்ப்பித்தல்

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்தமாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது .

## தீர்மானங்களை நிறைவேற்றல்

1. **திர்மானஇல:-**தீர்மான இலக்கம் **KPPS/M.MEETING/55/SEPTEMBER/01/2022**

- எமது சபையில் தற்போது பெறுகைக்குழு உறுப்பினராக கடமையாற்றிவரும் திரு.மா.வினோத் ~ கணக்காளர் (கச்சேரி , மட்டக்களப்பு)அவர்கள் வேலைப்பழு காரணமாக மேற்படி பதவியிலிருந்து விலகுவதனால் அவ் வெற்றிடத்திற்கு புதிய பெறுகைக்குழு உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்கான சபை அங்கீகாரம் பெறல் .

**மேற்படித் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர்** திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன்மொழிந்ததுடன், அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதோடு தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் , திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி , திரு. சண்முகம் கதிரவன் அகிய 15 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன், தீர்மானத்திற்கு எதிராக ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன், திரு. குணராசா குணசேகரன், திரு.கிருக்ஷ்ணபிள்ளை சேயோன், ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் ஆகிய 05 உறுப்பினர்கள் வாக்களித்தனால் **KPPS/M.MEETING/55/SEPTEMBER/01/2022 இலக்க** தீர்மானமானது 10 மேலதிவாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதுடன் ,ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் அவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் அவர்கள்** எனது வட்டாரந்தில் 12 இந்து ஆலயங்கள் காணப்படுவதாகவும் அதில் 05 ஆலயங்களின் உற்சபம் முடிவடைந்துள்ளதாகவும் ஆனால் இன்னும் அதற்காக கோரப்பட்ட மின்குமிழ்கள் கிடைக்கப்பெறவில்லை எனவும் ஏனைய ஆலயங்களின் உற்சபம் நடைபெற விருக்கும் கோயில்களுக்கு வீதி மின்குமிழ்களைப் பொருத்தித்தருமாறு கேட்டுக்கொண்டார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள்** யூனியன் கொலணி கிராமத்திற்கு பின்னால் அமைந்துள்ள எல்லை வீதி என அழைக்கப்படும் வீதி புனரமைக்கப்பட்டிருப்பதாகவும் அதற்கு எவ்வளவு தொகை செலவீடு செய்யப்பட்டுள்ளது என கேள்வி எழுப்பினார் .

**அதற்குப் பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** அவ் வீதியானது எமது சபையால் புனரமைக்கப்படவில்லை என பதிலளித்தார்

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி அவர்கள்** கொண்டயன்கேணி பிள்ளையார் கோயில் பகுதியில் வீதி மின் விளக்கு பொருத்துவதற்காக கடிதம் தந்துள்ளதாகவும் அதனை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டதுடன் எனது வட்டாரத்திற்குட்பட்ட வீதிகளில் குப்பைகள் அதிகம அகற்றப்படாமல் காணப்படுவதனால் அதனையும் அகற்றித்தருமாறு தனது கருத்தினைப் பதிவு செய்தார்.

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 55ஆவது சபை அமர்வானது காலை 10.10 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

……….............…..………………..

**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.